ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2303/18 - 2022 ඔක්තෝබර් මස 26 වැනි බදාදා - 2022.10.26

*2303/18 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. - பீ 6/2017* (i)

***2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டம்***

*2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (3) (அ) என்னும் உட்பிரிவுடனும் மற்றும் 31 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 117 ஆம் பிரிவின் (2) (ட) என்னும் உட்பிரிவின்கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**நிமல் சிறிபால டி சில்வா,**
துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும்
விமான சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2022, ஒற்றோபர் 19.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆண்டின், சிவில் விமானசேவை (விமானத் தளத்தைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (ப.ச.வி.), மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (ம. ரா. ச. வி) மற்றும் கொழும்பு சர்வதேச விமான நிலையம், இரத்மலானை (கொ. ச. வி. இ) இல் தரையிறங்கும் ஒவ்வொரு வானூர்தியும் பின்வரும் தரையிறங்கும் மற்றும் தரிப்பிடக் கட்டணங்களை நியதிச்சட்டசேவை வழங்குநருக்கு கீழே ஏற்பாடு செய்யப்பட்டவாறு செலுத்துதல் வேண்டும்.

1A - PG 6017 — 356 (2022/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(அ)

| | சர்வதேச விமானங்கள் | பயிற்சி விமானங்கள் உட்பட உள்நாட்டு விமானங்கள் |
|---|---|---|
| தரையிறக்கம் | தரையிறக்கம் ஒவ்வொன்றுக்கும் குறைந்தபட்சம் 250 ஐக்கிய அமெரிக்க டொலருக்கு அமைய விமானத்தின் அல்லது அதன் பாகத்தின் விமானம் கிளம்பும் நிறையின் MTOW* மெற்றிக் தொன் ஒவ்வொன்றிற்கும் 4 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் | தரையிறக்கம் ஒவ்வொன்றுக்கும் குறைந்தபட்சம் ரூபா 3000/- இற்கு அமைய விமானத்தின் அல்லது அதன் பாகத்தின் விமானம் கிளம்பும் நிறையின் MTOW* மெற்றிக் தொன் ஒவ்வொன்றிற்கும் ரூபா 300/- |
| தரிப்பிடம் | முதல் 3 மணித்தியாலங்களுக்கு இலவசம் 6 மணித்தியாலங்களுக்கு அல்லது முதல் 3 மணித்தியாலங்களின் பின்னர் அதன் பாகத்திற்கான தரையிறங்கும் கட்டணத்தின் 10 சதவீதம் | முதல் 3 மணித்தியலங்களுக்கு இலவசம் 3 மணித்தியாலங்களுக்கு அல்லது முதல் 3 மணித்தியாலங்களின் பின்னர் அதன் பாகத்திற்குமான தரையிறங்கும் கட்டணத்தின் 10 சதவீதம் |

* அதிகபட்ச கிளம்பும் நிறை

(ஆ) பயிற்சி விமானங்கள் தொடர்பில் வரிசைப்படுத்தும் நெறிமுறையின்போது எந்தக் கடைசிச் சுற்றில் பின்வரும் அணுகுமுறைகளில் ஏதேனும் ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளதோ அந்த கடைசிச் சுற்றுக்கு மட்டுமான கட்டணம் ஒன்றாதல் வேண்டும்.

(i) பார்வை அணுகுமுறை;
(ii) கருவி அணுகுமுறை; அத்துடன்
(iii) விமானத்தளத்தில் தரையிறங்காமல் (தொட்டுச்செல்லல்) சுற்றுப்பாதை மற்றும் தரையிறக்க அணுகுமுறை.

(இ) பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட அணுகுமுறைகளில் எவை தொடர்பில் இறுதி கடைசிச் சுற்றின்போது அணுகுமுறை பற்றிய பயிற்சி விமான திடீர் முறிவு ஒன்றில், அத்தகைய அணுகுமுறை, கட்டணத்தை அறவிடும் நோக்கத்திற்காக கடைசி சுற்று ஒன்றாக கருதப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், தரையிறக்க கழிவு மற்றும் தரிப்பிட கட்டணங்கள் என்பன புதிய அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச விமான நிறுவனம் ஒன்றுக்கு பின்வருமாறு ஏற்புடையதாதல் வேண்டும் :-

| வீத வகை | விமானநிலையத்தின் பெயர் | ஏற்புடையற்பாலதான வீதங்கள் மீதான கழிவு வீதம் | | | |
|---|---|---|---|---|---|
| | | முதலாவது வருடம் | இரண்டாவது வருடம் | மூன்றாவது வருடம் | நாளாவது வருடம் |
| தரையிறக்கமும் தரிப்பிடமும் | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (ப. ச. வி.) | 50% | | | |
| | மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (ம. ரா. ச. வி.) | 100% | 75% | 50% | 25% |
| | கொழும்பு சர்வதேச விமான நிலையம் இரத்மலானை (கொ. ச. வி. இ) | | | | |

**முதலாவது வருடமானது, ம. ரா. ச. வி நிலையத்தின் விமானத்தளத்தின் தொழிற்படுத்துநருடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளும் தேதியிலிருந்து ஆரம்பித்தல் வேண்டும். அடுத்துறும் ஆண்டுகள், சொல்லப்பட்ட கழிவுக்கு தகுதியுடையவராக இருப்பதற்காக உடனடியாக தொடருதல் வேண்டும்.

* அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச விமான நிறுவனங்கள் ம.ரா.ச.வி. நிலையத்தில் வாரமொன்றுக்குக் குறைந்தபட்சம் ஒரு அட்டவணைப்படுத்தப்பட்ட விமானம் ஒன்றை தொழிற்படுத்துவதற்கு ம. ரா. ச. வி. நிலையத்தில் விமான தளத்தின் தொழிற்படுத்துநருடன் உடன்படிக்கை ஒன்றை செய்திருப்பின் மட்டும் ப. ச. வி. நிலையம் தொடர்பில், கழிவுக்கு உரித்துடையவராக்கப்படல் வேண்டும்.

3. 2020, செத்தெம்பர் 08 ஆந் திகதிய 2192/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 2014, யூலை 02 ஆந் திகதிய 1869/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (ப. ச. வி.) மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (ம. ரா. ச. வி.) மற்றும் இரத்மலானை சர்வதேச விமான நிலையங்களில் (இ. ச. வி.) விமான தளங்களை பயன்படுத்துவதற்கான விதிப்பனவுகள் ஒழுங்குவிதிகள் அதன்கீழ் முன்னரே ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

4. இவ்வொழுங்குவிதிகளில், சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி -

"விமானத் தளம்" என்பது, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைச் சட்டத்தின்கீழ் அதற்கு குறித்தளிக்கப்படுகின்றதான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"இறுதி அணுகுமுறையில் முறிவு" என்பது, ஒரு விமானம் விமான நிலையத்தில் தரையிறங்க நெருங்கியதும் தரையிறங்காமல் விமானத்தை நிறுத்தியது என்று பெருளாகும்;

"சுற்று மற்றும் தரையிறக்கம்" என்பது, விமானநிலையத்தைச் சுற்றி முன்னரே தீர்மானிக்கப்பட்ட பலகோணப் பாதையில் பறக்கும் விமானம் மற்றும் விமான நிலையத்தில் தரையிறங்குகின்றது எனப் பொருள்படும் (இந்த நடைமுறை பயிற்சிக்காக பலமுறை மீண்டும் மீண்டும் செய்யப்படுகின்றது.)

"பணிப்பாளர் தலைமையதிபதி" ஆனவர், 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமானசேவைச் சட்டத்தின் கீழ் அதற்கு குறித்தளிக்கப்படுகின்றதான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"கருவி அணுகுமுறை" என்பது, விமான தளத்தில் தரையிறங்குவதற்கு தரை மற்றும் விமானக் கருவிகளின் வழிகாட்டுதலைப் பயன்படுத்தும் விமானம் எனப் பொருளாகும்;

"புதிய அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச விமான நிலையம்" என்பது, அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச விமான சேவைகளை தொழிற்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட விமான நிலையம் எனப் பொருள்படும். 2 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் விட்டுக்கொடுப்பானது தற்போதுள்ள அட்டணைப்படுத்தப்பட்ட சர்வதேச விமான நிறுவனங்களுக்கு தன்னிச்சையாகவே ஏற்புடையற்பாலதாகாது;

"விமானத் தளத்தின் தொழிற்படுநர்" ஆனவர், 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின்கீழ் அதற்கு குறித்தளிக்கப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"நியதிச்சட்ட சேவை வழங்குநர்" என்பது, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவை சட்டத்தின் பிரிவு 6(3) (அ) வின் கீழ் நியமிக்கப்பட்ட நியதிச்சட்ட சேவை வழங்குநர் எனப் பொருள்படும்;

"தொட்டுச் செல்" என்பது, விமானம் பறக்கும் சுற்றுவட்டப்பாதை மற்றும் தரையிறக்கு ஓடுபாதையின்கீழே தொட்டு முழு நிறுத்தம் தரையிறங்காமல் புறப்படுதல் எனப் பொருள்படும்.

EOG 10 - 0232